ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

अहं गमिष्यामि वनं सुदुर्गमं मृगायुतं वानरवारणैर्युतम् ।
वने निवत्स्यामि यथा पितुर्गृहे तवैव पादावुपगृह्य संयुता ॥

रामायणे ।

ஸ்ரீ ராகவனிடம் ஸீதாதேவி கூறுகின்றாள்.

"மான், குரங்கு, யானை, புலி, காடி, முதலிய பலமிருகங்களுடன் கூடியதும், பிரவேசிப்பதற்கு முடியாததாயுமிருக்கும் வனத்திற்குத்தங்களுடன் நானும்கூடவே வரப்போகின்றேன். என்பிதாவினுடைய கிருகத்தில் எப்படி வஸிப்பேனோ, அவ்விதமே வனத்தில் தங்களுடைய பாதங்களைப்பூஜித்துக்கொண்டு சுகமாயிருக்கிறேன்." என்று அறிவிக்கும் பார்யையைநோக்கி அரண்யத்தில் அனேக விதங்களான கஷ்டங்கள்நேரும், பிதுர்கிருகத்தில் மிகவும் சுகமாயிருக்கலாம். ஆகையால் என்னுடன்வராமல் தந்தையின் கிருகத்திற்கேசெல் என்று தடுக்கும் பகவானைப்பார்த்து ஸீதை அறிவிக்கின்றதாவது.

स्वर्गेऽपि च विना वासः भविता यदि राघव ।
त्वया मम नरव्याघ्र नाहं तमपि रोचये ॥

பிதாவினுடைய கிருகத்தில் சுகமாய் வஸிக்கலாமென்று தங்களால் கூறப்பட்டது, இதைக்காட்டிலும், எவ்வளவோ அதிகசுகத்தைஅடையக்கூடிய ஸ்வர்க்கலோகத்தில் எனக்கு இடம்கிடைத்தாலும் தங்களைவிட்டு அதைஅடைவதில் எனக்குத்திருப்தியில்லை. ஆகையால் தங்களுடன் வஸிப்பதே, பிதுர்கிருகத்திற்கும் ஸ்வர்க்கலோகத்திற்கும் மேற்பட்டவாஸம் என்றாள். லோகமாதாவான ஸீதாதேவியின் அபிப்பிராயத்தைக் கவனித்தால் ஸ்திரீகளுக்கு தம்பர்த்தா தாழ்ந்தஸ்திதியிலிருந்தாலும் எவ்வித கஷ்டங்களையனுபவித்தாலும் அவனுடன்கூடவேதான் அவசியமிருக்க வேண்டுமென்றும் வேறு இடத்தில் இருக்கக்கூடாதென்றும் பதிவிரதா ஸ்திரீகளுக்கிருக்கவேண்டிய முக்கியமான தர்மம் என்றுவெளியாகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-ஹு ஆனி-மீ ௨௬௨

வேதாந்தஸாரம்.

(௩௫௬-வது பக்கத்தொடர்ச்சி.)

இவவிதம் பஞ்சீகரணம் செய்யப்பட்ட இந்த பூதங்களிலி ருந்தும் பூமி, புவஸ், ஸுவஸ், மஹஸ், ஜநஸ், தபஸ், ஸத்யம் முதலான மெம்மேலிருக்கும் ஏழுலோகங்களும், அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மஹாதல, பாதாலம் முதலான கீழ்க் கீழிருக்கும் லோகங்களும் பிர்மாண்டத்திலும் அதின்மத்தியிலு மிருக்கும் நான்குவித ஸ்தூல சரீரங்களும் அவைகளுக்கு யோக் கியமான ஆஹாரம், தீர்த்தம் முதலியவைகளும் உண்டாகின்றன. நான்குவித சரீரங்களாவன:—ஜராயுஜம், அண்டஜம், உத்பிஜ்ஜம், ஸ்வேதஜம், என்பவைகளே. ஜராயுஜம் என்றால் ஜராயு என்கிற சர்மாவிலிருந்தும் உண்டாகும் மனுஷ்யன், பசு முதலானவைக ளுக்குப்பெயர்.

पशवश्च मृगाश्चैव व्यालाश्चोभयतोदकः ।
रक्षांसि च पिशाचाश्च मनुष्याश्च जरायुजाः ॥

பசு, மிருகம், ரக்ஷஸ், பிசாசங்கள், மனுஷ்யர்கள் முதலானவை கள் ஜராயுஜங்கள் என்று ஒரு பண்டிதரும் கூறியுள்ளார். அண்ட ஜம் என்பது—அண்டம் என்றால் முட்டை, அதிலிருந்தும் உண் டாகின்றவை எனப்படும். பக்ஷி, பாம்பு, பல்லி முதலியவை இதைச்சேர்ந்தன. மூன்றாவது உத்பிஜ்ஜம், பூமியைப்பிளந்து கொண்டு உண்டாகும் செடி, கொடி, மரம்முதலானவைகளுக்குப் பெயர். ஸ்வேதஜம் என்றால், ஸ்வேதம் என்றால் வியர்வை, அதி லிருந்தும் உண்டாகும் பேன், கொசு, மூட்டை இவைகளுக்குப்

பெயர். இங்கும் நான்கு விதங்களான சகல ஸ்தூல சரீரங்களும் ஸமுதாய ரூபமாக ஏகபுத்தி விஷயமாவதாலும், பிரத்தியேக ரூபமாய் அனேகபுத்தி விஷயமாவதாலும், வனத்தைப்போலும், ஸமுத்திரத்தைப்போலும் ஸமஷ்டியாகவும் மரம், ஜலம் இவைகளைப்போல் வியஷ்டியாகவும் ஆகின்றன.

இந்த ஸமஷ்டியுபஹிதமானசைதன்யம் வைச்வானரன் என்றும், விராட் என்றும் சொல்லப்படுகின்றது. ஸர்வஜனங்களிடமும் அபிமானத்துடனிருப்பதால் வைச்வானரன் என்கிற பெயரும், அனேகப் பிரகாரமாகப் பிரகாசிக்கின்றபடியால் விராட் என்கிற பெயரும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த வைச்வானரனுக்கு ஸமஷ்டிதான் ஸ்தூல சரீரம். அஃது அன்னத்தினுடைய விகாரமாயிருப்பதால் அன்னமயகோசமாகிறது. ஸ்தூலமான போகத்திற்கு ஸ்தானமாயிருப்பதால் ஸ்தூலசரீரம் என்றும், ஜாக்ரதவஸ்தையில் இருப்பதால் ஜாக்ரத் என்றும் கூறப்படுகின்றது. இந்த வியஷ்டி ஸ்தூலோபஹித சைதன்யம் விச்வம் என்று பெயரையடைகின்றது. ஸூக்ஷ்மசரீராபிமானத்தை விடாமல் ஸ்தூல சரீரம் முதலானவைகளில் பிரவேசித்திருப்பதால் இவனுக்கும் இந்த ஸ்தூலவியஷ்டி சரீரமானது ஸ்தூல சரீரமாகும். அன்ன விகாரரூபமாயும், ஜாக்ரத்திலுமிருப்பதால் அன்னமயகோசம் என்றும், ஜாக்ரத் என்றும் சொல்லப்படுகின்றது. ஜாக்ரத் அவஸ்தையில் விச்வன், வைச்வானரன் என்கிற இவ்விருவர்களும் திக், வாயு சூர்யன், வருணன், அச்வினீதேவதை இவர்களால் ஏவப்பட்டிருக்கிற காது முதலிய ஐந்து இந்திரியங்களால் முறையே சப்தம் ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்என்ற இவைகளையும் அக்னி இந்திரன் உபேந்திரன், இயமன், பிரஜாபதி இவர்களால் ஏவப்பட்டவைகளான வாக் முதலான ஐந்து இந்திரியங்களால் முறையே பேசுதல், ஈதல், போகுதல், விடுதல், விஷயானுபவம் என்ற இவைகளையும், சந்திரன், பிர்மா, சங்கரன், அச்சுதன் இவர்களால் முறையே தூண்டப்பட்ட மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என்று பெயர்கொண்ட உள்ளிருக்கும் நான்கு இந்திரியங்களால் ஸங்கற்பம், நிச்சயம், அகங்காரம், சித்தத்தின்கார்யம் முதலான சகலமான ஸ்தூல விஷயமான இவைகளையும் அனுபவிக்கிறார்கள்.

இங்கும் ஸ்தூல வியஷ்டி, ஸமஷ்டி உபஹிதர்களான விச்வ, வைச்வானரர்களுக்கு வனம், விருக்ஷம்போலும், அதிலடங்கிய ஆகாயம்போலும், ஸமுத்திரம், ஜலம் இவைகள்போலும் இவைகளில் பிரதிபிம்பித்த ஆகாசம்போலும் முன்போல் அபேதமாகக் கொள்ளவேண்டும். இத்துடன் ஸ்தூலப்பிரபஞ்சோற்பத்தி முடிவு பெற்றது.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆரோக்யம்.

(368-வது பக்கத்தொடர்ச்சி)

(3) உணவு.

நாம் பிரதிதினமும் நன்றாகப் பசி உண்டான பிறகு சாப்பிடவேண்டியது. பதார்த்தங்களில் உப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு இம்மாதிரி ஆறு ரஸங்களில் எந்தெந்த பதார்த்தங்கள் பிரதானமாயிருக்கிறதென்று அறிந்து உபயோகிப்பது விசேஷம். உப்பினால் அஸ்தியும், கசப்பினால் மேதஸ்ஸும், காரத்தினால் மாமிஸமும், துவர்ப்பினால் ரஸமும், அன்னத்தினால் சுக்லமும் இம்மாதிரியாக ஆஹார ரஸங்கள் ஸப்த தாதுக்களையும்போஷிக்கிறதென்றுவைத்திய சாஸ்திரங்களின் கொள்கை.

सायंप्रातर्मनुष्याणामशनं वेदनिर्मितम् ।
नान्तरा भोजनं कुर्यादुपवासविधिर्हि सः ॥ व्यासः ।

மனிதர்களுக்கு இரண்டுவேளைதான் ஆஹாரத்திற்கு காலம் குறிக்கப்பட்டிருக்கிறது. சுருதியும் இவ்விதமே கூறுகின்றது. ஆஹாரத்தை உட்கொள்ளும்பொழுது அன்னம்போன்ற கடின பதார்த்தங்களினால் அரை வயிறும், ஜலம் முதலிய த்ரவபதார்த்தங்களினால் கால்வயிறும் ஆகமுக்கால் வயிறு ஆஹாரத்தைஉட்கொண்டு பாக்கி கால் வயிற்றை வாதசஞ்சாரத்திற்காக விட்டுவிடவேண்டி

யது. முற்காலத்தில் பெரியோர்கள் ஆகாராதிவிதிகளை யதோக்தமாய் நடத்திவந்ததோடு, ஏகாதசி முதலிய தினங்களில் உபவாஸமிருந்து துவாதசி முதலிய பாரணை தினங்களில் நெல்லிக்காய் அகத்திக்கீரை சுண்டைக்காய் முதலிய ஆரோக்கிய வஸ்துக்களை உபயோகித்துக்கொண்டு வந்தார்கள். ஆகையால் அவர்களுக்கு எவ்விதமான ரோகங்களும் அணுகாமல் இருந்ததுடன் மலபந்தத்தாலேற்படக்கூடிய கொடிய நோய்கள் அவர்களுக்குக் கிடையாது. அதுபோல் நாமும் விதியுடன் காலத்தில் யதோக்தமான ஆஹாரங்களைக்கிரஹிக்கவேண்டும்.

(4) நாம் குடிக்கும் தண்ணீர்.

நாம் உட்கொள்ளும் உணவில் முக்கியமான பாகம் ஜலம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சரீரத்தில் மூன்றில் ஒருபாகம் ஜலம். சாப்பிடுகிற கெட்டி ஆகாரங்களுடைய சாரம் இரைப்பையினின்று ரத்தத்தில்சேர, ஜலத்தில் கரைந்தே சேரவேண்டும். தேகத்தின் கழிவுபதார்த்தங்கள் தேகத்தை விட்டு வருவது ஜலத்தில்கரைந்தே வியர்வையாகவும் மூத்திரமாகவும் வெளிவரவேண்டும். தேகத்தில் நடக்கும் எவ்விதமான மாறுதல்களுக்கும் ஜலம் முக்யமானது. ஆகையால் நாம் ஜலத்தை பலவிதமாக உட்கொள்ளுகிறோம். ஜலமானது ஆகாயத்தில் நீராவியாகவோ சிறிது தூளிகளால் நிறைந்த மேகமாகவோ இருக்கும் பொழுது சுத்தமாகவே இருக்கிறது. மேகத்தினின்றும் மழைத் தூளிகளாக இறங்கும்பொழுது வாயுமண்டலத்திலுள்ள சிலகாற்றுக்கள் கலக்கின்றன. தரையில் விழுந்ததும் தரையிலிருக்கும் பலவித உப்புக்கள், பிராணிகள், புல், பூண்டுகள். முதலியவைகளின் கழிவுபதார்த்தங்கள் அதுவுடன் சம்மந்தப்படுகிறது. இந்த ஜலத்தில் சிலபாகம் தரைக்குள் இறங்கி ஊற்றுக்களாகவும், கிணறுகளாகவும், வெளியேவருகின்றன. சிலபாகம் ஆறுகளிலோ ஏரிகளிலோ குளங்களிலோசேர்ந்து ஜனங்களால் உபயோகப்படுத்தப்படுகிறது. இவ்விரண்டு சுத்தமான ஜலங்களிலும், நமது பழக்கத்திற்கு வேண்டியதை சுத்தமுடையதாக எடுத்துக்கொள்ளலாம். அவ்விதமே மனுஷ்ய மிருகாதிகள் கழிவுபதார்த்தங்கள் சேராத அல்லது சேரக்கூடாத ஜலம் தீங்கற்றது. இத்தண்ணீர்

முக்யமென்பதைக் கருதியே ஆகாயம் எவ்வளவு அதிகமாக வியாபித்திருக்கிறதோ அவ்விதமே தண்ணீர் மூன்றுபாகமும் பூமியை ஒருபாகமும் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார். அதில் முதவில் ஜலத்தை சிருஷ்டித்தாரென்பதற்கு:—

अप एव ससर्जादौ तासु वीर्यमपासृजत् ।

என்ற வாக்யமே பிரமாணமாகும்.

நமது சரீரங்களிலும் இன்றியமையாததான ஜலபாகங்கள். இருக்கின்றன. அதனால்தான் நமது முன்னோர்கள் இந்த ஜலத்தை முக்ய தேவதையாகக் கருதி இருக்கின்றனர். ஜலம் சகல உணவுப்பொருள்களையும் விருத்தி செய்கிறது. அதின் குணாதிசயங்கள் வரம்பு கடந்து நிற்கின்றது என்பதற்குஐயமில்லை. அசுத்தமான தண்ணீரினால் உண்டாகும் வ்யாதிகள் எண்ணிறந்தவை. அவைகட்குக் காரணம் கிருமிகளே. நாம் ஸ்நானம் செய்யும்பொழுதும் உணவருந்தும் போதும் நமது யாக்கைச்சென்று அங்கு விருத்தியடைந்து வரவா சரீரத்தை அழித்துவிடுகின்றன. அநேக ஜீவராசிகளைப் பற்றிய விஷய தத்வங்கள் பெருங்கடலான வேதங்களில் ஆங்காங்கு மொழிபெயர்க்கப்படாமல் போகப்படவில்லை. யஜுஸ்ச்சாகையில், ருத்திரப்பிரச்னங்களில் பூமியிலும் ஆகாயத்திலும், வாயுவிலும், ஜலத்திலும், பலவகையான நுண்ணிய ஜீவராசிகள் எல்லையின்றி வியாபித்திருப்பதாகக் கூறியிருப்பதைக் காணலாம். ஆங்குள்ள நுண்ணுயிர்கள் உருத்திரர்கள் எனப் பெயரால் வழங்கப்படுகிறார்கள். இந்நுட்பமான உயிர்களுக்கெல்லாம் கிருமிகளே காரணம்.

உலகத்திற்குத் துன்பம் விளைவிக்கும் ஜந்துக்களைக் கருதும் போது உருத்திரர்கள் என்னும் சில அம்சங்களைப் பூமிமுதலாக ஆகாயமீறாகஉள்ள பஞ்சபூதங்களிலும் உணவிலும் பறவச்செய்து வியாதிகளை உண்டுபண்ணுகிறாரென்று வேதமோதுகின்றது. ஆகையால் அந்த ஜந்துக்களுக்கும் ருத்திரர் எனப்பெயர் கொடுக்கப்பட்டது.

रोदयति सर्वं अन्तकाले इति रुद्रः ॥

என்பதைக் காரணப்பெயராகக் கூறலாம்.

கிருமிகளால் தொத்துவியாதிகள் சம்பவிக்கின்றன என்று ஆயுர்வேத நூல்களில் பல விடங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்விஷயங்கள் வேதங்களில் கூறப்பட்டவைக ளென்பதற்கு ஐயமில்லை. ஆதலால் ஜலங்களில் கிருமிகள் விசேஷமாக இருக்கின்றன என்பதும், அவைகளால் வியாதிகள் உண்டாகின்றன என்பதற்கும் அக்கிருமிகளிடமிருந்து தப்பிக்கொள்ளும் பொருட்டு வேதங்களில் கூறியிருக்கும் மந்திரங்களையும் நாம் கவனிக்க வேண்டும்.

பரமாணுரூபமான அநேகவித நுண்ணுயிர்கள் உலகில் எங்கும்பரவி அவைகளில் சிலவற்றால் தொத்துவ்யாதிகள்சம்பவித்து வ்யாபிக்கின்றன என்பதற்கு இத்தகைய வேதவாக்யமே போதுமான சான்றாகும். நமது சரீரத்தில் தீங்கிழைக்கும் கிருமிகள் எங்கும் வியாபித்திருப்பதைத் தெரிந்தே ஆரோக்ய நிலைமையை அவை அழிக்காமல் தேகத்தைக் காப்பாற்றுவதற்கு உள்ளும் புறமும் சுத்தமாயிருக்க வேண்டுமென்று சுகாதாரமான வைத்ய சாஸ்திரம் கூறுகிறது.

ஸ்மிருதிகளும், ஆஹ்நிகங்களும் வேதப்பிரமாணங்களை ஆதாரமாகக்கொண்டு அனுபவரீதியாக மொழிபெயர்க்கப்பட்ட சுகாதாரமுறைகளை அனுஸரித்து அனைவரும் ஆசார நிஷ்டர்களாகயிருந்துவர வேண்டுமென்று, முனிவர்கள் நமது மனதிற்கு எட்டாதெனக்கருதி முன் காலத்திலேயே மொழிந்திருக்கின்றனர். ஆகையால் அவரவர்கள் தமது வர்ணாச்ரமத்திற்கு விரோதமின்றி கர்மானுஷ்டானத்தை நடத்தி வருவார்களேயாகில் ரோகமின்றி ஆரோக்யமாக வெகுகாலம் வாழலாம்.

வர்ணாச்ரமம், என்றால் வர்ணம் என்றால் பிரம்ம, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர, என்று நால்வருக்கும் கிரகணம் ஆச்ரம் என்பதற்கு சாஸ்திரீயமான ஸம்ஸ்காரமடைந்து, அதில் சொல்லியபடி கர்மாவை அனுஷ்டிக்கிறதென்பது பொருள். இவ்விதம் அனுஷ்டிப்பவர்கள் ஆச்ரமிகளாகிறார்கள். இவ்விதமான ஆச்ரமத்திலும் நான்கு பிரிவுகளுண்டு. பிரம்மசாரி, கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், ஸந்நியாஸி என்பவை. இவைகளுள் கார்ஹஸ்தியம் என்பதே ரொம்பவும் மேலானது. அதினின்றும் நித்ய கர்மாக்களை

விடாமலனுஷ்டித்தால் சித்தசுத்தி ஏற்பட்டு முக்தி யடையலாம். ஸ்ரீ பகவானும்,

नित्यं स्वाध्यायशीलः स्यान्नित्यं यज्ञोपवीतवान् ।
सत्यवादी जितक्रोधो ब्रह्मभूयाय कल्प्यते ॥
संध्यास्नानरतो नित्यं ब्रह्मयज्ञपरायणः ।
अनसूयुर्मृदुर्दान्तो ग्रहस्थः प्रेत्य वर्धते ॥
यज्वा च देवभक्तश्च ब्रह्मलोके महीयते ॥

இவ்விதம் அந்தந்த ஆச்ரமத்திற்க் கேற்பட்டிருக்கும் தர்மத்தை வேதம், ஸ்மிருதி, புராணம் முதலிய எந்த பிரமாணத்தால் கூறப்பட்டாலும் அதில் வித்தியாசமான தன் அபிப்பிராயத்தைக் கலக்காமல் "श्रुतिस्मृती ममैवाज्ञा" என்று பகவான் ஆக்ஞையாக அறிந்து பிராதக்காலத்தில் அவரவர்களுக்குத் தகுந்தபடி ஸ்நானம், ஜபம் முதலியவைகளைச்செய்து அதினின்றும் ஆரோக்யம்பெற்று நெடுநாள் வாழ்வதுடன் பரலோகத்திலும் விசேஷமான சிரேயஸ்ஸைப்பெற்று கிருதார்த்தர்களாக ஆகவேண்டுமென்று ஸ்ரீ பார்வதி நாதனை பிரார்த்திக்கிறேன். சுபம்.

K. R. வைத்தியநாதசாஸ்திரிகள்.

॥ धर्मकल्पतरुः ॥

தர்மகல்பதரு.

———)o(———

तृतीयः पल्लवः = மூன்றுந்துளிர்.

शरीरम् अस्थिरम = யாக்கை நிலையற்றது.

उद्यदिन्दुनिभच्छत्रशोभिते हि मतङ्गजे ।
अप्यारूढाः परिवृढा मृताः प्रोक्ता न चान्यथा ॥१॥

சந்த்ரோதயம்போன்ற குடையால் இலங்கும் யானையின் மீது பவனிவரும் பிரபுக்களும் பிராணனைத் துறந்தோர்களாகச் சொல்லப்படுகின்றனரேயன்றி, வேறில்லை. 1.

यतो मानोस्त्रशालीनः प्रत्यहं समुदेत्यतः ।
आयुषोऽवसितेः पूर्वं धर्मं चरत जन्तवः ॥२॥

தினந்தோறும் பிராணிகளின் வாழ் நாளின் அளவுகருவியாம் கதிர்களால் விளங்கிக்கொண்டே ஸூர்யன் உதயமாகின்றான்; ஆதலால், பிராணிகளே! தமது வாழ் நாள் முடிவுபெறுதற்கு முன்பாகவே தர்மஞ்செய்புங்கள். 2

य एव वादित्रनादो विवाहेऽनादयत्सदः ।
स एव स्यान्मृतेर्नाद इत्युच्चिष्ठन्ति साधवः ॥३॥

எந்த வாத்யகோஷம் விவாஹவேளையில் (என்று) ஸபையை எதிரொலிக்கச் செய்ததோ, அந்தவாத்ய நாதமே (அன்றே) மரணச் சடங்கின் அறிகுறியாக வாறுலுமாகலாம் என்று நினைந்தே மஹான்கள் துறவிகளாகின்றனர். 3.

एक द्वि त्रिक्रमेणैव मृतिघण्टां प्रणाद्य च ।
स्कन्धेनोद्वा मृतं यान्ति दग्धुमित्यवधत्त भोः ॥४॥

ஒன்று, இரண்டு, மூன்று—இவ்வாறாக மரணக்குறி மணியை ஒலிக்கச்செய்து, உயிரற்ற உடலைத் தோளில் சுமந்து, சுடுகாடு செல்வதைக் கவனியுங்கள். 4.

क्रोशत्सु बन्धुचक्रेषु चिताक्षेपं मृतस्य च ।
दृष्टवन्तोऽप्युपयमे मन्वते हि मुधा सुखम् ॥५॥

உறவினர் கூட்டம் கூக்குரலிடவும், உயிரற்றசடலத்தைக் கட்டையிலிடவும்—கண்டவர்களும், இல்லற ஸுகத்தில் வீணாக இச்சை கொள்ளுகின்றனர். 5.

चर्मभस्त्राशरीरस्थे कर्म कारयति प्रभौ ।
उद्गते तदिदं वर्ष्म बद्धं दग्धं वृथा गतम् ॥६॥

தோல் துருத்தியாம் காயத்தின் நடுவிருந்து தொழில் புரிவிக்கும் இறைவன் இருப்பிடஞ் சென்றதும், இச்சடலம் கட்டுண்டு, பஸ்மமாக்கப்பட்டு வீணாகிவிடுகின்றது. 6.

'जलबुद्बुदसङ्काशं शरीरं न हि शाश्वतम् ।'
इत्यालोच्य जनुःखेदत्यागिनोऽनुपमाः स्मृताः ॥७॥

'நீர்க்குமிழிபோல்தோன்றி மறையுமியற்கை வாய்ந்தது யாக்கை, எக்காலும் நிலைத்திராதது' என்று ஆராய்ந்து. (தானதர்மஞ் செய்து) பிறவித்துன்பத்தை ஒழித்தவர்கள் இணையற்றவர்களென்று கூறப்பட்டிருக்கின்றனர். 7.

दृष्टनष्टस्वभावो हि प्राणोऽद्रिचलमेघवत् ।
अतो ये दृढकायास्ते विन्दन्तु लघु तत्फलम् ॥८॥

வர்ஷிப்பதற்கு மலையில் அலையும் மேகம்போல உயிர், கண்டு வொழியுந்தன்மை பொருந்தியது; ஆதலால், உடலில் உயிர் வலிமை பெற்றவர்கள்—விரைவாகவே இயன்ற தர்மஞ்செய்து உடற்பயனைப்பெற்று, உய்யட்டும். 8.

अत्र स्थितोऽत्रोपविष्टः शयितश्चाद्य यः पुमान् ।
स एवारं मृतो, देहो दूर्वालग्नहिमोपमः ॥९॥

எவன் இங்கு இப்பொழுது நின்றானோ, உட்கார்ந்திருந்தானோ, படுத்திருந்தானோ, அம்மனிதனே சீக்கிரம் (இப்பொழுதே) உயிர் துறந்தான்; ஆகலின், உடல் (நிலை) அருகின் நுனியில் பற்றின பனித்துளிபோன்றதாம். 9.

अनाहूता हि मनुजा आगता बन्धवो गृहे ।
विहाय कायं यान्त्येव, द्रुमे नीडमिवाण्डजाः ॥१०॥

ஒவ்வோர் கிரஹத்திலும் ஆண் பெண் வடிவமான எத்துணையோ ஜீவராசிகள் அழைக்கப்படாமலேதோன்றி, வளர்ந்து, பறவைகள் மரத்தில் கூட்டைவிட்டு விட்டோடுவதுபோல, சடலத்தைத் தள்ளிவிட்டு (ஒருவரிடமும் விடைபெறாமலே) செல்லுகின்றனர். 10.

(மூன்றாந்துளிர் முற்றும்.)

(தொடரும்)

கே. ஏ. இராமலிங்கசாஸ்திரீ,
'ஸம்ஸ்க்ருத காமதேனு' பத்திராதிபர்.
கல்லிடைக்குறிச்சி.

ஹிந்துமத தர்மம்.

(௨கள-வது பக்கத்தொடர்ச்சி)

5 பிரகரணம்.

பிராம்மண்யத்தின் நழுவுதலும் அதைத்தடுக்க வேண்டிய முக்கியமும்.

நாம் இதுவரையில் பிராமணனுக்குப் பார்த்தமாத்திரத்திலறியக்கூடிய மூன்று முக்கியமான வெளியடையாளங்களைப்பற்றி ஒருவாறு சொல்லிவந்தோம். நான் பிராமணர்களை மாத்திரம் பார்த்து இவ்வளவு கண்டிப்பாய்ச்சொல்ல முக்கியகாரணமென்னவெனில் பிராமணன் தற்காலநிலைமைகளையனுசரித்தமட்டிலாவது அவனுக்கு ஏற்பட்டதர்மங்களை வெளிப்புறத்திலும் உள்ளும் சரியாய் அனுசரித்து நடத்திவந்தானானால் மீதியிருக்கும் ஹிந்துஜன சமூகங்கள் வர்ணாச்ரமதர்மத்தைப் பற்றியும் பிராமணனைப் பற்றியும் என்ன ஏளனமாய் நினைத்தாலும் அல்லது பேசினாலும்கூடத் தங்களுடைய தர்மாசார நடவடிக்கையில் அவர்கள் அபிவிருத்தியடைவார்களென்று எனக்குப் பூர்ணநம்பிக்கை யிருப்பதுவேதான். வர்ணாச்ரமதர்மத்தையும் பிராமணனையும்பற்றி இக்காலத்தில் தூஷணை கிளம்பியிருப்பதற்குப் பிராமணனுடைய தவறுதல்களும், பிராமணனுடைய குற்றங்களுமே முக்கியஜவாப் என்பது உண்மையென்பதைக் கேட்க நமக்கு எவ்வளவு அஸந்தோஷகரமாயிருந்தாலும் நாம் அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. பிராமணனுயிருந்து அப்பிராமணவாழ்க்கையைக் கைக்கொண்டதன் கொடியபலன்களைப் பிராமணன் அனுபவிக்க வேண்டியிருப்பது சரியான நியாயமாகத்தானிருக்கிறது. அவன் மிகவும் அவச்யகரமான சாஸ்திரவிதி கர்மங்களைக்கூடச் சரியானபடி செய்யத்தவறினதனாலும், தனது பிராகிருத சரீரத்திற்கு மேலாக ஒன்று இருப்பதாக நினைவேயில்லாமலும் அந்த தேகத்திற்குள் தேகியாகிய ஆத்மாயிருப்பதை முற்றும் மறந்தும் சரீர சம்பந்தமான சவுக்கிய சுகவாழ்வே பெரிதென்று உத்தியோகங்களைக் கைக்கொண்டதினாலும், தன்னிடத்தில் அந்தர்கதமாயிருக்கும் பிராம்மண்யத்தை அவன் மிகவும் அசக்தமாக்கிக் கொண்டிருக்கிறான். பார்க்கப்போனால் அவன் தன்னுடைய சரீர இந்திரியங்களுக்குதன்னை அடிமையாக்கிக்கொண்டிருக்கிறான், தன்னு

டைய பலவித துர்ஆசாரத்தோடு நில்லாமல் அனேக இடங்களில் முக்கியமாய் மலையாளதேசத்தில் அவன் தன்னுடைய துர்நடத்தையினாலே பிரும்மத்வேஷம்உண்டாகுமாறுசெய்துகொண்டிருக்கிறான். துர்நடத்தைகளுக்கு இன்னின்னபலனென்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு இக்காலத்தில் பிராமணர்கள் மீது பிராமணரல்லாதாரின் தர்ம விரோதமானபகை மூண்டகிளர்ச்சிகள் ஏற்பட்டுவிட்டதே அத்தாக்ஷியாகும். இது அர்த்தகாமாதுர்களாகிய பிராமணனுக்குத் தீராத மானக்கேடான அபகீர்த்தியே ஆகும். நான்சொல்வதை தப்பபிப்பிராயப்படக்கூடாது. இந்த சரீரசம்பந்தமான உலகத்தில் பிராமணனுடையதத்வஞான சாதனமாகிய நிலைமையை அவனுக்கு ஞாபகமூட்டவேண்டுமென்பதுவே எனது கருத்து. அப்படிஞாபகமூட்டுவதில் அவன் தன்னுடைய உன்னதப்பதவியிலிருந்து அனியாயமாய் நழுவியிருப்பதைப்பார்த்து நான்கடுமையாய்ப் பேசாமலிருக்க முடியவில்லை. ஆகையினால் நான் மன்னிப்புக் கேட்கவேண்டியதில்லை. என்றாலும், மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(2) ஆனால் நம்முடைய தர்மமார்க்கஸ்தாபனத்தை நிலைநிறுத்தும் பெரியகாரியத்தைச் சாதிக்கும்விஷயத்தில் இந்தக்காலமிருக்கப்பட்ட நிலைமைகளையும், நிர்ப்பந்தங்களையும் நாம் ஆலோஜிக்காமல் அலக்ஷியம் செய்யக்கூடாது. இப்போது நமக்கு ஸ்பஷ்டமாய்த்தெரியும் சூழ்சிகளை ஆலோஜனையிலெடுத்துக்கொண்டு சிலமுடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை நிறைவேற்றும் பக்ஷத்தில் உங்களுக்குச் சில கடைசியானவார்த்தைகளைச் சொல்லிவிட்டு எனது உபன்யாஸத்தை நான்நிறுத்திக் கொள்ளுகிறேன். உங்களில் அனேகர் பௌதிகவாதம், ஒன்றிலும் விச்வாசமின்மை, சிற்றின்பபோகம் நாஸ்திகம் முதலிய ஆத்மசம்பந்தமல்லாத கீழான நோக்கங்களின் சந்நிக்கு விரோதமாய் எதிர்த்துச் சண்டைசெய்ய ஆத்ம சம்பந்தமான வ்யவகாரங்களடங்கிய ஆரிய கைங்கரியத்தில் ஆழ்ந்தகருத்துடன் அமர்ந்திருக்கிறீர்களென்று நம்பியே உங்களுக்குச் சிலகடைசியான வார்த்தைகளைச் சொல்லக்கடமைப்பட்டு முன்வந்தேன். மேற்கண்ட கீழ்மையான நோக்கங்கள் கொஞ்சகாலம் சரியான ஏற்பாடுபோலவும் வல்லமையுள்ளவைபோலவும் காணப்பட்டுக்கொண்டு உலகவாழ்க்கை

யின் கொழுப்பினுல் கண்தெரியாமல் அறிவீனத்தால் அப்போ தைக்கப்போது வாக்குவல்லபத்தோடு கோஷம் செய்தாலும் கடைசியில் குறியில்லாத வீண் குழப்பத்தில் அலைந்தலைந்து அலு த்து ஸாரமில்லாதுசிதாப்போகும்படிமுடிவில்கட்டாயம்நேரிடும்.

(3) ஆகையால் நான் உங்களுக்குக் கடைசியாய்ச்சொல் வது என்னவெனில்:—ஆதியில்லாத ஜனனமரணச்சுழலில் வெகு காலம் துன்பத்திற்கும் பந்தத்திற்கும் உட்படுத்தப்பட்ட நிலைமை யிலிருந்து கடைசியாய் விடுதலையடைதலென்னும் மோக்ஷமாகிய குறியானபலனை (பிர்மவித்தையைச் சரியாய்க்கைக்கொண்டு உப யோகிப்பதனுல்) அடையும் மார்க்கத்தை நமக்குக் காட்டிக்கொ டுக்கும் சாஸ்திரத்திலும், எல்லாரையும் ரக்ஷிக்கும் நம்முடைய வைதீக மதத்திலும் உலகத்திலுள்ள எல்லாரைக்காட்டிலும் பிரா மணர்களாகிய நீங்களாவது கட்டாயம் முழுநம்பிக்கை வைக்க வேண்டும்.

பிராமணர்களாகிய நீங்கள்தான் வேதங்களினுடைய பொ றுப்பான ஸம்ரக்ஷகர்களாயிருக்கிறீர்கள். உங்களுக்குக் கொடுக் கப்பட்டிருக்கும் மார்க்கங்களால் உங்களைச்சூழ்ந்திருக்கும் மானி டக்குலத்தின் இந்திரியவசமான அறியாத்தனமுள்ள ஜனசமூகங் களைக் கல்விப்பயிற்சி செய்து கைதூக்கிவிடும் கடமையை ஈச்வ ரன் உங்களுக்குக் கொடுத்திருக்கிருர். மதவிஷயத்தில் உங்களு டைய இனத்தாருக்கிருக்கும் அறிவும் ஆசாரணையும் பெரிதும் குறைவாயிருக்கிறதென்று கண்டுகொண்ட அவர்கள் உங்களைக் கொஞ்சம்கூடச் சட்டைசெய்யவில்லை யென்றும், அவர்கள் இர க்கமில்லாமலும் அகந்தையுள்ளவர்களாயும் மூரணனவர்களாயும் கூட ஆய்விட்டார்களென்றும், இப்போது அவர்கள்பேரில் நீங் கள் புகார்சொல்லும் பக்ஷத்தில் அப்படி அவர்கள் ஆய்விட்ட தப்பிதத்திற்கு நீங்களேதான் ஜவாப்தாரிகளென்றும் நான்சொல் லுகிறேன்.

நீங்கள் உங்களது தர்மமாகிய உயர்ந்த பதவியிலிருந்து நழு வினீர்கள். சரீர சம்பந்தமான போட்டிநிறைந்த சிற்றின்ப வாழ் வையுடைய உலகமார்க்கங்களில் நீங்கள் எப்போது தீர்க்காலோ சனையில்லாமல் நழுவி விழுந்தீர்களோ அப்போதே ஷெ இனத்

தார்களோடு நீங்கள் முட்டிக்கொள்ளாமலிருக்க எப்படி முடியும்?

" தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை   என்பது திருக்குறள்

அப்படி நீங்கள் கீழ் நழுவாத பக்ஷத்தில் அவர்கள் இன்னும் உங்களுக்கு அடங்கிய மாணாக்கர்களாய் இருந்தே வருவார்கள். நீங்கள் கீழேநழுவினதானது விலக்கக்கூடாதசம்பவமென்று ஆயிரம் சாக்குகள் சொல்லி வாதிப்பீர்களென்பது மனித சுபாவந்தான். அப்படிப்பட்ட சாக்குகளில் அனேகம் உண்மையிருக்கலாமென்பதற்கும் சந்தேகமில்லை. ஆனாலுங்கூட நீங்கள் உங்களது ஸ்தானத்திலிருந்து நழுவிவிட்டீர்கள் என்பதும் அதுவும் உங்களுடைய பழைய அந்தஸ்திற்குச் சீக்கிரமாயாவது சுளுவாயாவது எழுந்திருந்து ஏறவகையில்லாதபடி அவ்வளவு தாழ்ந்தஸ்திதிக்கு நழுவிவிட்டீர்களென்பதும் வாஸ்தவமேயல்லவா ? பழையகாலப் பிராமணர்களுடைய நிலைமைக்கு எவ்விதத்தினும் சமனாக ஆவது நமக்கு அசாத்யம் போலிருக்கிறது. இந்த உலகமானது நாலு லக்ஷத்தி முப்பத்தீராயிரம் வருஷங்களடங்கிய இந்தக் கலியுகம் முற்ற முற்ற வைதீகமான சுறுசுறுப்பிலிருந்து இளைப்பாறுவது போல் அறியாமையாகிய தூக்கத்தில் நீண்டகாலம்ஒடுங்கியிருக்க வேண்டுமென்று ஈசுவான்சங்கற்பித்திருப்பதாய்த் தெரிகின்றது. ஆத்மசம்பந்தமான பிரவர்த்தி தூங்கிக் கொண்டிருக்கும்போது சரீரசம்பந்தமான பிரவர்த்தி சந்தடி கோஷம் செய்வது சரியான இயற்கை தானே. ஜீவாத்மாவாகிய ஒருவன் எவ்வளவுக்கு அதிக நித்திரை கொள்ளுகிறானோ அவ்வளவுக்குச் சரீரத்தில் சரியான காலங்களில் அடக்கி நிர்வகிக்கும் அப்யாஸமில்லாத பக்ஷத்தில் கோஷமான கொரட்டை அதிகரிக்கின்றது. அந்த கொரட்டை எவ்வளவு கடூரமாயும் ஸ்மரணை தப்பினதாயுமிருந்தாலும் அதைப் பற்றிப் புகார் செய்வதில் பிரயோஜனமில்லை. உங்களுடைய துடுக்கான இனத்தார் மேல் புகார் செய்வது இந்தக் கலியுகத்தில் உங்களுடைய ஆத்மசம்பந்தமான நித்திரையில் விடும் கொரட்டையில் ஒரு பாகமென்னலாம். உங்களுடைய தேசத்தையும் உங்களுடைய ஜனங்களையும் பற்றின வைதீகமான நிலைமைகளின் பேரிலும் சூழ்ச்சிகளின் பேரிலும் உங்களுக்கு எவ்வித ஆதீனமும் கிடையாதென்பது வாஸ்தவமே. உங்களுடையமஹான்களாகிய

ருஷிகள் பிராம்மண்யமானது வரவர நிச்சயமாய் க்ஷீணிக்குமென்றும் அதுபற்றி பிராமணர்களில் அனேகர் பிராமணராயிராமல் முற்றிலும் நழுவி விடுவார்களென்றும் இந்த யுகத்தின் அந்தத்தில் உண்மையான பிராமணர்கள் சிற்சில குடும்பங்கள் தான் மீதியிருப்பார்கள் என்றும் அவர்களே தூக்கந்தெளிந்து எழுந்திருப்பவர்களைப்போல வருகிற முழு தர்மகாலமாகிய கிருதயுகத்தில் வேலை செய்யும்படியான உத்தமகுண பிராம்மணசமூகத்தை உண்டாக்கி விருத்திசெய்ய விதைபோல் உதவுவார்களென்றும்முன்னமேயே கூறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் உங்களுக்கு ஏன் சொல்லுகிறேனென்றால் நீங்கள் பிராம்மண்யமேயில்லாமல் அழிந்துபோக இருக்கும் பிராமணர்களின் பெரும்பாலோரைச் சேரவிரும்புகிறீர்களா அல்லது இந்த யுகம் முடியும் வரையில் மோக்ஷமடையாமலிருந்தாலும் அதிகமான தர்மப் பிரவிர்த்தியினாலும் வைதிக அபிவிர்த்தியாலும் அப்படி மோக்ஷமடைகிறதற்குக்கிட்டத் தட்ட அருகர்களாயிருந்து கொண்டு சத்ய யுகமாகிய கிருதயுகத்தில் அந்த யுகத்திற்குறிய மேலான யுகதர்மதைச் சரியாய் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளும் சத்யமார்க்கங்களும இன்னின்னவென்று அறிந்து வரப்போகும் சந்ததிகளுக்கு எடுத்துக்காட்டும் பெரியோர்களாக. மறுபடி ஜனிக்க லாயக்குள்ளவர்களாயிருக்கும்படி மேலும் மேலும் அபிவிர்த்தியடையும் சாஸ்திர ஞானம் வாய்ந்த சிறுபாலோருடைய கோஷ்டியில் சேரவிரும்பிகிறீர்களா வென்பதை நன்றாய் ஆலோசியுங்கள் என்பதை எடுத்துக்காட்டவே நான் சொல்ல வந்தேன். இந்த விஷயத்தைப் பற்றி ஆவலோடு விசாரிப்பவர்களுக்கு அநேக கேழ்விகள் மனத்தில் உதயமாகும். அவைகளை யெல்லாம் நானே எடுத்து விஸ்தாரமாய்ச் சொல்ல இப்போது அவகாசமில்லாத தால் அப்படி விசாரிக்க ஆவலுள்ளவர்கள் சாவகாசப் பட்ட போது பிராம்மணன் என்பது பிறப்பினாலா குணத்தினாலா என்பது போன்ற தனக்குத்தோன்றும் கேழ்விகளையும் ஸம்சயங்களையும் வாதம் செய்து நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

(4) பிராமண்யத்தை நம்மிடத்தில் காப்பாற்றிக் கொள்ள நாம் செய்யவேண்டியதென்னவெனில் நம்முடைய மனதுள்ளூரச்சுத்தத்தையும் பெருக்கத்தையும் வெளித்தோற்றத்தில் சீரசுத்தியையும் மிகவும் ஜாக்கிரதையாய்க் காப்பாறறி வரவேண்டியது.

உண்மையான ஹிந்து வைதீகக் கொள்கைக்கு அவச்யமேயில்லாத முற்றிலும் உலகவாழ்க்கை சம்பந்தமான காரியங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் அவச்யம்போல் நினைத்து விருதுகளையும், பில்லைகளையும், த்வஜங்களையும், உடைக்கோலங்களையும், ஸ்வயக்ஷவரத்தையும் அபேக்ஷித்துத்தேடும் இந்நாளில் ஹிந்துவின் தோற்றத்திற்கு அத்யாவச்யமான வெளியடையாளங்களாகிய சாதாரணதேசாபிமான உடையைக்கட்டவேண்டிய முறைகளையும் சிகை புண்ட்ரம், யஞ்ஞோபவீதம்போலொத்த குறிகளையும் கண்டிப்பாய் அனுஷ்டிக்கச்சொல்லிக் கட்டாயப்படுத்துவது ஒரு தகாத காரியமாகுமா ? இவைகளைக் காப்பாற்றுவது உங்களுடைய சொந்த நன்மைக்காகவும் சாஸ்திரதர்ம மார்க்கத்தால் உயிர் வாழ்கையின் பலனுய் அடையவேண்டிய ஆத்மாவின் மோக்ஷஸாதனத்திற்காகவுமே உங்களுக்கு முக்கிய ஆவச்யகமாயிருக்கின்றது. உங்களது சமூகத்தில் அநேகர் மேற்கண்ட வெளித்தோற்றக் குறிகளை ஒன்றொன்றாய்க் கைவிட்டு வருகிறார்களென்பதைப் பார்த்து நீக்கள் துயரப்படவேண்டிய அவச்யமில்லை. ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கையின் குறியெல்லாம் கூடி மிருகப்பிராயமான காம சுகமும் சரீரசம்பந்தமான அர்த்த மூலமானசௌகரியமுமேயாகையால் உங்களுடைய வாழ்க்கைக் குறிக்கு அது முற்றிலுமே வேறுபட்டிருக்கிறது. அவர்கள் எத்தனைக்கு எத்தனை சரீரத்தோற்றங்களை நம்முடைய தோற்றத்திலிருந்து வேறு படுத்திக் கொள்ளுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கு க்ஷேமமென்றும் அவர்கள் அப்படிச் செய்துக் கொள்வதைச் சீக்கிரத்தில் நிறைவேற்றிக் கொள்ளவேண்டு மென்றும் நாம் ஈச்வரனைப் பிரார்த்திக்க வேண்டுமே யொழிய விசனப்பட நியாயமில்லை. ஆகிலும் ஹிந்து விரோதிகள்போல மேலுக்குக் காணப்பட்டாலும் நாம் அவர்களுடைய தவறுதல்களிலிருந்து அவர்களை உய்விக்க நெருங்குவது பிரயோஜனப்படுமென்று எண்ணக் கூடியதான ஆசாமிகள் யார் யார் இருக்கிறார்களென்று நாம் தேடிக் கண்டு பிடிக்கலாம். இப்படி உபகாரம் செய்ய நாம் இறங்குவதில் ஏதாவதுஏமாறாமல் வந்தாலும் வரட்டுமென்று நாம்தயாராய் இருக்க வேண்டியதுதான். நாம் ஜெயிக்க மாட்டோமென்று சம்சயித்தபேர்வழிகள் விஷயத்தில் நீஙகள் எதிர்பாராத ஜயமடைந்தாலும் அடையலாம். ஜயம் வருமென்று எண்ணி நிச்சயித்த இடங்களில் தோல்வியடைந்தாலும் அடையலாம்.

(தொடரும்)

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரேங்கஸாமிஅய்யர்.